செய்திக்குறிப்பு   dt: 06.02.2018

காரைக்கால் மாவட்டம் திருமலைராயன் பட்டினம் போலகத்தில் அமைந்துள்ள இம்மானுவேல் குழந்தைகள் காப்பகத்தில் இன்று 12.40 மணியளவில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார்கள். அப்போது 36 குழந்தை மட்டுமே இருந்தார்கள். ஆட்சியர் சம்பந்தப்பட்ட ஆயா அவர்களிடம் விசாரித்த போது அனைவரும் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள் என்று கூறினார்கள். இராஜீவ் காந்தி குழந்தைகள் காப்பகம் காரைக்காலில் சுமார் 25 இயங்குகிறது என்று தெரிவித்த ஆட்சியர் அவர்கள் கடந்த இருவாரங்களுக்கு முன்பு இதேநேரத்தில் ஆய்வு செய்த போது சமையல் செய்யும் இடமே இல்லை. மத்திய அரசு நிதியைப் பெற்றுக்கொண்டு சட்டம்மீறி ஏமாற்றினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய ஆட்சியர் அவர்கள் ஏழை தொழிலாளிகள் தங்கள் குழந்தைகளை விட்டுவிட்டு வேலைக்கு செல்கிறார்கள் அவர்களுக்கு உணவு இட்டு பத்திரமாக பார்த்துக் கொள்ளும்படி ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

6/2/18